بسم الله الرحمن الرحيم

# GOD'S WAYS ARE NOT BED OF ROSES

# இறைமார்க்கம் சோதனைகள் நிறைந்ததே ஆகும்

## வெள்ளிக்கிழமை குத்துஃபா 18-05-2012

## FRIDAY SERMON

# HAZRAT MUNIR AHMAD AZIM (A)

இந்தியா, டினிடாட், டுபோஹோ மற்றும் சமீபத்தை சாந்த சில தீவுகளின் பெயர்களை எடுத்துக் கூறிக்கொண்டு, உலகின் பல்வேறு பகுதியிலுள்ள தனது தோழர்களுக்கு சமாதான வாழ்த்துக்கள் தெரிவித்த பிறகு கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீத்தும், தஅவ்வுசும், அல்-பாத்திஹாவும் ஓதி கீழ்வருமாறு கூறினார்.

ஆன்மீகத்தை அடைய முயற்சி செய்கின்றவர் மட்டுமே அதனுடைய உண்மையான பலனை பெறுகின்றன. தூதுவ மன்னன் முஹமது முஸ்தபா(ஸ) அவர்கள் ஆன்மீகத்தின் மிக மகத்தான உயர்பதவியை எட்டியவர். அவ்வாறு இருந்த போதிலும் தன்னுடைய நம்பிக்கையை பாதுகாப்பதற்கு அதிக அளவு இன்னல்களை அவருக்கு சந்திக்க நேர்ந்தது. மதத்தின் உண்மையான பலன் கிடைப்பது, அதற்காக நாம் உயிரினை இழந்ததற்கு பிறகு மட்டுமே ஆகும். அல்லாஹ் விரும்பியிருந்தால் விஷயங்கள் இவ்வாறு தீர்மானித்திருக்கமாட்டான். பௌதீக விஷயங்களுக்கும் அதன் நிகழ்வுகளுக்கும் இவ்வகையிலான சட்டதிட்டங்களை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். அதாவது கடினமான உழைப்பால் நமக்கு அனைத்தையும் அடைய முடியும். அல்லாஹ்வின் அருளாலும் ஒருவன் தன்னுடைய முயற்சியினாலும் மட்டுமே அவன் எண்ணுகின்ற இலக்கை எட்ட இயலுவது. லௌகீக உலக விஷயங்களில் முன்னேற்றம் அடைவது கூட ஏராளமான துன்புறுத்தல்களையும், துயரங்களையும் வெற்றிகொள்வதன் விளைவாகவே தான் என்பதில் சந்தேகமில்லை.

மததொடர்பான முன்னேற்றங்களுக்கு கடினமான உழைப்பு தேவையில்லை என்று எண்ணுகின்றீர்களா? இவ்வுலக விஷயங்களுக்கு, எதற்கு ஒரு சிறு வழக்கு தொடர்பான நீதிமன்ற விஷயத்திற்காகவே ஒருவர் எல்லா திசைகளிலும் திரும்பி அதற்கு தேவையான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி வெற்றிக்கு தேவைப்பட்டதை யாவும் சமர்ப்பிக்கின்றான். அதற்கு அதிகமான பணம் செலவிடுகின்றான். அதைபோன்றே அவருக்கு கடினமாக உழைக்க வேண்டியதாகவும் வருகின்றன. இவ்விதமான உழைப்பிற்கு பிறகும் அந்நபருக்கு எதிராக தீர்ப்பு வந்தால் அவர் உயர்நீதிமன்றத்தில் முறையீடுக்கு மேல் முறையீடுகளுமாக செல்கின்றார். அதாவது தன்னுடைய லட்சியத்தை எட்டும் வரையில் அவர் கடினமாக முயற்சிகளில் ஈடுபட்டு கொண்டே இருக்கின்றார்.

இவ்வுலக விஷயத்தை சார்ந்த முன்னேற்றங்களுக்காக கடினமான முயற்சிகள் மேற்கொள்ளும் போது, மததொடர்பான முன்னேற்றங்களுக்கும் வெற்றிக்கும் மட்டும் எந்த உழைப்புமின்றி சுமூகமான முறையில் நற்பலனை காணமுடியும் என்று எண்ணுகின்றீர்களா? யாராவது தொட்டுகொள்வதன் மூலமாகவோ அல்லது,

சில மந்திரங்களை கூறிக்கொள்வதன் காரணமாகவோ மார்க்க தொடர்பான முன்னேற்றத்தையும் நற்பலனையும் பெற்று விடலாம் என்று எவராவது நினைக்கின்றீர்களா?

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

**"நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறுவதால் மட்டும் அவர்கள் விட்டுவிடுவார்கள் என்றும் அவர்கள் சோதனைக்கு ஆளாக்கமாட்டார்கள் என்றும் மக்கள் எண்ணுகின்றார்களா"?** (29-3)

அதாவது இம்மக்கள் நினைக்கின்றார்களா அவர்களை சோதனைக்கு உட்படுத்தாமல் விட்டுவிடுவோம் என்று. நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று அவர்கள் தன் நாவினால் கூறுகின்றன. அவ்வாறு கூறுகின்றவர்களை பிறகும் சோதனைக்கு உட்படுத்தி அதன் மூலம் வெற்றி காண்கின்றவர்களை மட்டுமே உண்மையான நம்பிக்கையாளராக அல்லாஹ் ஏற்று கொள்வது. அவ்வாறின்றி வெறும் வார்த்தைகளால் கூறுகின்றோர்களை அவன் நம்பிக்கையாளராக ஏற்றுகொள்ளமாட்டான். சோதனைகள் தவிர்க்க முடியாத ஒன்றே ஆகும். இதுவே திருமறையின் பாடம். இவ்விஷயத்தை அனைத்து நபிமார்களும் ஒத்துகொள்கின்றதேயாகும். ஒருவருடைய முன்னேற்றத்தில் சோதனைகள் அவசியமாகும். பலவகைப்பட்ட சோதனைகளை வெற்றி கொள்வதன் மூலமே ஒருவர் உண்மையான நம்பிக்கையாளராக எண்ணப்படுகின்றார்.

துன்பத்தை கடந்து சென்ற பின்னவே இன்பம் ஏற்படுவது. இது இயற்கை விதியாகும். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் ஒருவர் இறைமார்க்கத்தில் ஏற்படுகின்ற துன்புறுத்தல்களையும் துயரங்களையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகவில்லையென்றால் அந்த நபர் அம்மார்க்கத்திருந்து வேறுபட்டவர் என்று எண்ணி கொள்ளட்டும். ஏனெனில், பின்னடைய்வுக்கு பிறகு தான் முன்னடைவு ஏற்படுகின்றது.

அதைப்போன்றே ஒருவர் எதிர்கொள்கின்ற துன்பங்களுடையவும் துயரங்களுடையும் அளவுகோன்படியே அவரின் நம்பிக்கையை அளப்பது. ஆன்மீக முன்னேற்றங்கள் கிடைப்பதற்கு ஒருவர் முதலாவதாக துன்புறுத்தல்களையும் துயரங்களையும் சந்திக்க தயாராக வேண்டும்.

மௌரிஷியாவின் பலபகுதிகளிருந்தும் மக்கள் எனது பக்கம் வருகின்றனர். நான் அவர்களை தொட்டால் ஆன்மீக உயர்வும், உள்ள தூய்மையும் பெற்று விடலாம் என்று எண்ணுகின்றன. அத்தகையாளர்கள் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். துன்பங்களை எதிர் கொள்வதன் மூலவும் துயரங்களை வெற்றி கொள்வதன் மூலவுமின்றி முன்னேற்றத்தை எட்டமுடியாது. இது ஆன்மீக உயர்வுக்கு அவசியமே ஆகும். இறைதூதர்கள் அனைத்து வகை துன்பங்களின் பாதையில் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்த எளியவனும் நூற்றுக்கணக்கான சோதனைகளை சந்தித்து கொண்டிருக்கின்றேன். எல்லா வழிகளிலும் அனைத்து திசைகளிலும் எனது தோழர்களும் மற்று உண்மையை தேடுகின்றோர்களுக்கும் இவ்வகை சோதனைகளுக்கு ஆளாக்கமாட்டார்கள் என்று எண்ணுகின்றீர்களா? அனைத்து நம்பிக்கையாளர்களும் சோதனைகளின் பாதையில் பயணம் செய்ய வேண்டியது கட்டாயமாகும். அது வழி அல்லாஹ் உங்களது நம்பிக்கையை பரிசோதித்துப்பார்க்கின்றான். எவர் ஒருவர் தனது சோதனைகளை வெற்றிகொள்வாரோ, அல்லாஹ் அவரிடத்தில் திருப்தி அடைகின்றான். அல்லாஹ் அவனது அருகாமையில் வருகின்றான். மட்டுமின்றி அல்லாஹ்வின் கலீஃபாவுடன் அவனை இணைக்கவும் அவ்வழியில் அவனை உறுதிப்படுத்தவும் செய்கின்றான். நமது வாழ்வின் உண்மையான லட்சியம் என்பது அல்லாஹ்வை அடையச் செய்வதேயாகும். அல்லாஹ் இல்லை என்றால் நாம் ஒன்றுமல்லை. அவனே நமது இரட்சகன். அவன் இருபத்தி நாலுமணி நேரவும் நமக்கு பாதுகாவலனாக இருக்கின்றான். அவனே நமது எதிராளிகளை ஏளனத்திற்கு ஆளாக்கின்றான். அவன் மட்டுமே ஹஸ்ரத் உமர்(ர) போன்று எதிராளிகளை கூட உறுதியான நம்பிக்கையின் பால் பரிணமிக்க செய்வதும். அல்லாஹ்வின்

தூதரின் லட்சியம் அல்லாஹ்வும் அவரது உண்மையான தோழர்களும் ஆகும். அவர்களே, அல்லாஹ்விற்கும் அவனது தூதனுக்கும் **"லப்போக்"** சொல் முன்வந்தது. நான் இதோ ஆஜர் ஆயிருக்கின்றேன், எல்லா இறைகட்டளைகளும் நிறைவேற்ற தயாராக உள்ளேன். எந்த மறு பலனும் எதிர் பார்க்காமல் அவன் அவனது நேரத்தையும், வாழ்க்கையேயும் இஸ்லாமிற்காக சமர்பித்திருக்கின்றான். ஆம், சரியான இஸ்லாமிற்காக (சஹிஹில் இஸ்லாம்) இஸ்லாமின் தூய்மையேயும் வாய்மையேயும் நிலை நிறுத்துவதற்காக. அதல்லாமல் மக்கள் தங்களது கால்களால் எட்டி மிதிக்கப்பட்ட இஸ்லாமிற்காக அல்ல.

துயரங்கள் நிறைந்த ஆன்மீக பயணத்தில் ஞாபகம் வைத்து கொள்ள வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், அல்லாஹ் ஒரு நம்பிக்கையாளரையும் நஷ்டமடைய அனுமதிப்பதில்லை என்பதாகும். பௌதீக விஷயங்களுக்காக மக்கள் கடினமாக உழைக்கின்றன. அதேநேரத்தில் மதசார்பான விஷயங்களில் வெற்றிகள் மிக சுலபமாக கிடைக்கும் என்றும் எண்ணுகின்றன. சோதனைகளோ துன்பங்களோயின்றி ஒன்று தொடுவதன் மூலமே வெற்றியை எட்டலாம் என்று எண்ணுகின்றன. ஒரு விசாயியை கவனிப்போம். விடியற்காலை வேளையில், தன்னுடைய துயிலை முறிக்கின்றான். தனது விதைகளை நுணுக்கமாகவும், பொறுமையுடனும் விதைக்கிறான். அதற்காக அவன் பெரும் இன்னல்களை சந்திக்கின்றான். இரவும் பகலும் அதற்காக அவன் ஓய்வின்றி உழைக்கின்றான். இவ் அனைத்து உழைப்பிற்கு பின் விதைகள் பருவம் அடையும் போது அதற்கு எவ்விதமான தீங்கும் விளையாமல், பாதுகாப்பதற்கும் அவர் கடினமாக பாடுபடுகிறான். இறுதியில் அவற்றை கெட்டுபோகாமல் சேமிக்கின்றான். சுருக்கமாக கூறினால், அவன் மிக பெரிய அளவில் முயற்சிகளை அதற்காக மேற்கொள்கின்றான். இவையாவும் இவ்வுலகிற்காக வேண்டியே, அதாவது இன்றைய நாளுக்காக மட்டுமே. நாளை இவ்வுலகம் அவனிருந்து மாய்ந்து போகின்றது. மறைந்து விடுகின்றது. ஒன்றின் பின் ஒன்றாக அவனுக்கு ஏராளமான பிரச்சனைகள் வருகின்றது. அவ்வகை பிரச்சனைகளால் அவன் அவதிப்படுகின்றான். கொஞ்சம் விதைகள் பயிரிடுவதற்காக எவ்வளவு முயற்சிகள் தேவைப்படுகின்றது. அவ்வாறு இருக்கும் போது மதசார்பான வெற்றிகள் மட்டும் எளிதில் எட்டிவிடலாம் என்று எண்ணுகின்றீர்களா? அதற்கு எவ்வித முயற்சிகளும் தேவையில்லை என்று நினைக்கின்றீர்களா? அதற்காக சோதனைகளை வெற்றிகொள்வது அவசியம் என்று கருதவில்லையா? மார்க்கத் தொடர்பான விஷயங்களில் இவ்வகையிலான நம்பிக்கை வைத்து கொள்வதும், மதம் முற்றிலும் வருத்தம் இழைக்காத விஷயம் என்று எண்ணுவதும், பருவம் அடைந்த ஒரு பழத்தை ஒரு மரத்திருந்து பறித்தெடுப்பது போன்று மிக எளிதான காரியமேயாகும் அது என்று நினைப்பதும் சரியானமுறையல்ல. நபி(ஸ) வின் தோழர்களின் வாழ்க்கை வரலாறு படிக்கும் போது அவர்கள் என்னவெல்லாம் இன்னல்களை சந்தித்தன. என்னவெல்லாம் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டன. இரவும் பகலும் அவர்கள் ஓய்வு அடையவில்லை. அல்லாஹ்வின் மார்க்கத்தில் எல்லா வகையிலுமான தியாகங்கள் செய்தார்கள். அவர்களின் நம்பிக்கைக்காக தங்களது உயிர்களையும் பயிட்டன. அவர்களின் சிரங்களையே இறைவழியில் அர்பணம் செய்தார்கள். ஹஸ்ரத் நபி(ஸ) வும் தோழர்களும் சேர்ந்து ஒரு எதிராளியை சந்தித்த நிகழ்ச்சியை இத்தருணத்தில் நான் உணருகின்றேன்.

கோடைக்கால கதிரவன் சுடர்விட்டு எரியும் மத்தியவேளை. அவர்களின் முகங்களில் வீசியடித்த அனல்காற்று எந்த தயவும் அவர்களிடம் காட்டவில்லை. பசுமையால் சூழப்பட்ட ஓர் நீர் தடங்கத்தின் அருகில் அவர்கள் வந்தடைந்தன. அப்போது அவ்விடத்தில் வைத்து இறைவணக்கம் நடத்த நபிதோழர் ஒருவர் நபி(ஸ)யிடத்தில் அனுமதி கோரினார். உடனே நபி(ஸ) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார். நீங்கள் பாவமன்னிப்பு கூறிதிரும்புங்கள். உங்களுக்கு தெரியாதா நாம் ஒரு மிக பெரிய வேலையில் ஏற்பட்டிருக்கின்றோம். அல்லாஹ்வுக்காகவே நாம் இந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றோம். இவ்விடத்தில் வைத்து இறை வணக்கம் நடத்துவது நாம் நமது லட்சியத்தில் வெற்றிகாண துணை புரியாது. இறைதொண்டு புரிவதில் இன்னல்களும் இடர்களும் நேரிடவில்லை என்றால் அது உண்மையான சேவையாக இருப்பதில்லை. ஹிந்து குருக்கள்

செய்கின்றது போன்று, எதாவது ஒரு தடாகத்தை சுற்றி குமிழியிருப்பாதல் எவ்வித பலனுமில்லை. அவர்கள் இன்பம் நிறைந்த வாழ்க்கை நடத்துகின்றன. அழகு வாய்ந்த சப்பிரமஞ்சத்தில் கிடக்கும் போது இறைவனை நினைவு கூறுகின்றன. ஆகவே சோதனைகளுடையவும் இன்னல்களுடையவும் கட்டத்தில் நீங்கள் நிலைத்து நிற்க வேண்டும். அதாவது இறைமார்க்கத்தில் உயிரையும விட ஆயத்தமாக வேண்டும். அதுவே சரியான முறை.

ஆம் நீங்கள் உங்களது உயிரை (வாழ்வை) இறை மார்க்கத்தில் பயிடுவதற்காக எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இறைவழியில் அனைத்தையும் தியாகம் செய்வது மூலமே இறைவனை அடைய முடியும். இதுவே அல்லாஹ்வின் மார்க்கம். உலகம் படைக்கப்பட் காலம் முதல் இறை தூதர்களை தோற்றுவித்த நேரம் முதல் இதுவே தான் விதிமுறை. துன்பங்களையும் துயரங்களையும் தாண்டி செல்லாமல் இறை திருப்தியை பெற்று விட ஒருபொழுதும் இயலாது. இன்னல்களையும், சோதனைகளையும் சந்திப்பதின் வழியாக ஒருவர் சுயமாகவே புரிந்து கொள்கின்றார் நான் முன்பிருந்த நபர் அல்ல இப்போது என்பது. தியாகங்கள் மூலமாகவும் சோதனைகள் மூலமாகவும் ஒருவர் வெற்றியின் பால் சென்றடைவதை அல்லாஹ் பார்த்துகொண்டிருக்கின்றான். ஒருவர் துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி கொள்ள ஆயத்தமாகாதயிருக்கும் காலம் வரையில் ஆன்மீக முன்னேற்றத்தை பெற்றுவிடலாம் என்று எண்ணவேண்டாம். இவ்வுரையை நான் இங்கு நிறைவுப்படுத்துகின்றேன். நமது தியாகங்கள் அனைத்தும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக. ஆமீன். வருக்கின்ற வெள்ளிக்கிழமையும் இவ்விஷயத்தை குறித்த குத்துஃபா தொடர்ந்து நடத்த அல்லாஹ் ''தௌபீக்'' செய்வானாக. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Issued by: R. Jamaludin Raother, Amir (South Zone)
Jamaat Ul-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com
**Phone: 09447001832**

**Translated by**
**Abdul Sudeer**

**Proof Reader by**
**Azim Ahmad**
**09789180817**
**E-mail: sahihazisulsat@gmail.com**